# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII, Cr.P.C.)
## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 511/2025 |
| Deposition of Witness | : | PW-1 |
| Name | : | கருப்புசாமி |
| Father/Husband Name | : | சண்முகம் |
| Village | : | அலங்கியம் |
| Taluk | : | தாராபுரம் |
| Age | : | 41 |

**Accused Present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 07.09.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அலங்கியம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.08.2024-ம் தேதி தாராபுரம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் 1440 சரவணன் என்பவருடன் நானும், தலைமைக்காவலர் 671 பாண்டிசெல்வன் என்பவரும் குற்றத்தடுப்பு மற்றும் மதுவிலக்கு ரோந்து அலுவலாக நிலையத்திலிருந்து புறப்பட்டு ஊதியூர் காவல் நிலைய சரகம், குருக்கபாளையம் பெரிய தோட்டத்தில் சட்ட விரோதமாக தென்னை மரங்களில் கள் கட்டுவதாக கிடைத்த தகவலின்பேரில் போலீஸ் பார்ட்டியுடன் 15.00 மணிக்கு அங்கு சென்று கண்காணித்தபோது குருக்கபாளையம் பெரிய தோட்டத்தில் அமர்ந்திருந்த நபர் போலீஸ் பார்ட்டிகளைக் கண்டதும் அங்கிருந்து தப்பி ஓட முயன்றவரை துரத்தி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் நல்லமுத்து 62 த/பெ. முத்துசாமி கவுண்டர் 1/236 பெரியதோட்டம் குருக்கபாளையம் காங்கேயம் எனக்கூறியும் தான் அரசு அனுமதியின்றி சட்ட விரோதமாக தனது தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களில் பாளைகளை சீவி மண்முட்டிகளை கட்டி கள்ளை உற்பத்தி செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி 15.00 மணிக்கு கைது செய்தும் எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கின் சொத்துக்களை கைப்பற்ற பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் வந்த காவலர்கள் முன்னிலையில் 15.10 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சுமார் 2 லிட்டர் பிடிக்கக்கூடிய

மண்முட்டிகள் – 6, கள் சுமார் 8 லிட்டர் ஆகியவற்றை சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றினோம். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கின் சொத்துக்கள் எளிதில் கெட்டுப்போகும் தன்மை கொண்டதாலும், அச்சொத்தினை பாதுகாப்பாக நீதிமன்றத்தில் ஒப்புவிக்க போதிய உபகரணங்கள் இல்லாததாலும், வழக்கின் தன்மை கருதியும், காவல் ஆய்வாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் சம்பவ இடத்திலேயே 15.00 மணிக்கு தலைமைக்காவலர் 671 பாண்டிசெல்வன் மற்றும் என் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்து கள்ளை நிலத்தில் கொட்டியும், முட்டிகளை உடைத்தும் அழித்தோம். **அந்த அழித்தல் மகஜர் அ.சா.ஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி இரு மகஜர்களிலும் நான் மற்றும் தலைமைக்காவலர் 671 பாண்டிசெல்வன் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பின்னர் 17.00 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது தாராபுரம் மதுவிலக்கு அமலாக்கபிரிவு காவல் நிலைய குற்ற எண் 558/2024 U/S 4(1)(C) TNP (Amendment) Act 2024–ன் படி வழக்கு பதிவு செய்தார். இது சம்மந்தமாக தாராபுரம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரியிடம் கைப்பற்றியதாக சொல்லப்படும் கள்ளு என சொல்லப்படும் பானத்தை கள்தானா என்று உறுதிபடுத்த எந்த ஆய்வுக்கும் அனுப்பி சோதனை செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் அழித்ததாக சொல்லப்படும் பானையை நாங்கள் கைப்பற்றவில்லை என்றாலும் உடைந்த பானைகளை வழக்கு சொத்தாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பானையை உடைத்ததாக சொல்லப்படும் சமையத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாத நிலையில் நீங்கள் புகைப்படமோ, வீடியோவோ எடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் அவ்வாறு பானையை உடைத்திருந்தால் நான் புகைப்படமோ, வீடியோவோ எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. விற்பனைக்காக எதிரி 8 லிட்டர் அளவில் கள்ளும் முட்டிகள் 6 யும் வைத்திருப்பதாக சொல்லப்படும் நிலையில் நீங்கள் கள்ளு வைத்திருந்ததற்காக

வைத்திருந்த பாட்டில்கள் எதையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதாக சொல்லப்படும் நிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதையும் பெறவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர்களை நாங்கள் காவல் நிலையத்தில் வைத்துத்தான் தயாரித்தோம் மற்றும் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட கள்ளை சம்பவ இடத்தில் வைத்தே அழித்துவிட்டோம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்துதான் தயார் செய்தோம். சம்பவ இடத்தில் தென்னை மரம் ஏறுவதற்கான எந்த உபகரணங்களும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கள்ளு சேமித்து வைத்திருப்தற்கு உண்டான மற்றும் உற்பத்தி செய்வதற்கு உண்டான உபகரணங்கள் எதுவும் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தென்னை மரத்தில் குறுதுகளை சீவுவதற்கு பயன்படுத்திய அறிவாள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து நான் சொல்வதுபோல் எந்த கள்ளு மற்றும் முட்டியை கைப்பற்றவில்லை என்றும் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொல்வதுபோல் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 07:01:40 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII, Cr.P.C.)
## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 511/2025 |
| Deposition of Witness | : | PW-2 |
| Name | : | T.சரவணன் |
| Father/Husband Name | : | தில்லையப்பன் |
| Village | : | தாராபுரம் |
| Taluk | : | தாராபுரம் |
| Age | : | 52 |

Accused Present.
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 07.09.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தாராபுரம் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.08.2024-ம் தேதி நானும், தலைமைக் காவலர் திரு.கருப்புசாமி, தலைமைக்காவலர் 671 பாண்டிசெல்வன் ஆகியோர்களும் குற்றத்தடுப்பு மற்றும் மதுவிலக்கு ரோந்து அலுவலாக நிலையத்திலிருந்து புறப்பட்டு ஊதியூர் காவல் நிலைய சரகம், குருக்கபாளையம் பெரிய தோட்டத்தில் சட்ட விரோதமாக தென்னை மரங்களில் கள் கட்டுவதாக கிடைத்த தகவலின்பேரில் போலீஸ் பார்ட்டியுடன் 15.00 மணிக்கு அங்கு சென்று கண்காணித்தபோது குருக்கபாளையம் பெரிய தோட்டத்தில் அமர்ந்திருந்த நபர் போலீஸ் பார்ட்டிகளைக் கண்டதும் அங்கிருந்து தப்பி ஓட முயன்றவரை துரத்தி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் நல்லமுத்து 62 த/பெ. முத்துசாமி கவுண்டர் 1/236 பெரியதோட்டம் குருக்கபாளையம் காங்கேயம் எனக்கூறியும் தான் அரசு அனுமதியின்றி சட்ட விரோதமாக தனது தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களில் பாளைகளை சீவி மண்முட்டிகளை கட்டி கள்ளை உற்பத்தி செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி 15.00 மணிக்கு கைது செய்தும் எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கின் சொத்துக்களை கைப்பற்ற பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் வந்த காவலர்களாக தலைைக் காவலர் திரு.கருப்புசாமி மற்றும் தலைமைக்காவலர் 671 பாண்டிசெல்வன் முன்னிலையில் 15.10 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சுமார் 2 லிட்டர் பிடிக்கக்கூடிய

மண்முட்டிகள் – 6, கள் சுமார் 8 லிட்டர் ஆகியவற்றை சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றினோம். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கின் சொத்துக்கள் எளிதில் கெட்டுப்போகும் தன்மை கொண்டதாலும், அச்சொத்தினை பாதுகாப்பாக நீதிமன்றத்தில் ஒப்புவிக்க போதிய உபகரணங்கள் இல்லாததாலும், வழக்கின் தன்மை கருதியும், காவல் ஆய்வாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் சம்பவ இடத்திலேயே 15.00 மணிக்கு தலைைக் காவலர் திரு.கருப்புசாமி, தலைமைக்காவலர் 671 பாண்டிசெல்வன் ஆகியோர் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்து கள்ளை நிலத்தில் கொட்டியும், முட்டிகளை உடைத்தும் அழித்தேன். மேற்படி இரு மகஜர்களிலும் தலைைக் காவலர் திரு.கருப்புசாமி, தலைமைக்காவலர் 671 பாண்டிசெல்வன் ஆகிய இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள். பின்னர் 17.00 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது தாராபுரம் மதுவிலக்கு அமலாக்கபிரிவு காவல் நிலைய குற்ற எண் 558/2024 U/S 4(1)(C) TNP (Amendment) Act 2024–ன் படி வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதி இறுக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரியிடம் கைப்பற்றியதாக சொல்லப்படும் கள்ளு என சொல்லப்படும் பானத்தை கள்தானா என்று உறுதிபடுத்த எந்த ஆய்வுக்கும் அனுப்பி சோதனை செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் அழித்ததாக சொல்லப்படும் பானையை நாங்கள் கைப்பற்றவில்லை என்றாலும் உடைந்த பானைகளை வழக்கு சொத்தாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பானையை உடைத்ததாக சொல்லப்படும் சமையத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாத நிலையில் நீங்கள் புகைப்படமோ, வீடியோவோ எடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் அவ்வாறு பானையை உடைத்திருந்தால் நான் புகைப்படமோ, வீடியோவோ எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. விற்பனைக்காக எதிரி 8 லிட்டர் அளவில் கள்ளும் முட்டிகள் 6 யும் வைத்திருப்பதாக சொல்லப்படும் நிலையில் நீங்கள் கள்ளு வைத்திருந்ததற்காக

வைத்திருந்த பாட்டில்கள் எதையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதாக சொல்லப்படும் நிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதையும் பெறவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர்களை நாங்கள் காவல் நிலையத்தில் வைத்துத்தான் தயாரித்தோம் மற்றும் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட கள்ளை சம்பவ இடத்தில் வைத்தே அழித்துவிட்டோம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்துதான் தயார் செய்தோம். சம்பவ இடத்தில் தென்னை மரம் ஏறுவதற்கான எந்த உபகரணங்களும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கள்ளு சேமித்து வைத்திருப்தற்கு உண்டான மற்றும் உற்பத்தி செய்வதற்கு உண்டான உபகரணங்கள் எதுவும் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தென்னை மரத்தில் குறுதுகளை சீவுவதற்கு பயன்படுத்திய அறிவாள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து நான் சொல்வதுபோல் எந்த கள்ளு மற்றும் முட்டியை கைப்பற்றவில்லை என்றும் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொல்வதுபோல் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 07:01:48 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்